## பெற்றோர் / பராமரிப்பாளர் / பாதுகாவலர் தகவல் மற்றும் ஒப்புதல் கடிதம்

## 2024 பள்ளி தொடர்பாக மாணவர்களின் மனப்பான்மை பற்றிய கருத்தாய்வு

அன்புள்ள பெற்றோரே / பராமரிப்பாளரே / பாதுகாவலரே,

4 முதல் 12 ஆம் ஆண்டு வரை அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான பள்ளி தொடர்பாக மாணவர்களின் மனப்பான்மை பற்றிய கருத்தாய்வு (AtoSS) பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதே இந்தக் கடிதம்.

### கருத்தாய்வு குறித்தது

AtoSS என்பது மாணவர்களின் உணர்வுகள் மற்றும் பள்ளி அனுபவத்தைப் பற்றிய புரிதலைப் பெறப் பள்ளிகளுக்கும் திணைக்களயத்திற்கும் உதவுவதற்குக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும் வருடாந்த தன்னார்வக் கருத்தாய்வு ஆகும். மாணவர்களின் ஈடுபாடு, நல்வாழ்வு மற்றும் தரமான கல்விசார் அறிவுறுத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக மாணவர்களின் கருத்துக்களை நாங்கள் மதிக்கிறோம், மேலும் உங்கள் பிள்ளையின் பள்ளி, அவர்களின் கற்றல், சக உறவுகள், நெஞ்சுரம், கொடுமைப்படுத்துதல் (bullying), உடல்நலம் மற்றும் நல்வாழ்வு, உடல் செயல்பாடு மற்றும் பொதுவான வாழ்க்கை தொடர்பான அவர்களின் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளைப் பற்றிக் கேட்போம்.

ORIMA Research Pty Ltd ஆனது, இணையவழிக் கருத்தாய்வை நிர்வகிப்பதற்குத் திணைக்களத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதுடன் தொலைபேசித் துரித இணைப்பு மற்றும் மின்னஞ்சல் மூலம் கருத்தாய்வு மேற்கொள்ளப்படும் காலம் முழுவதும் பள்ளிகளுக்கு ஆதரவை வழங்கும்.

இந்த ஆண்டு, உங்கள் பள்ளியில் 20/05/2024 to 14/06/2024 முதல் கருத்தாய்வு நடத்தப்படும்.

### நன்மைகள் யாவை?

இளையவர்கள் அவர்கள் கருத்துக் கேட்கப்படுவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்! இந்தக் கருத்தாய்வு ஏறத்தாழ 20 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. மேலும் உங்கள் பிள்ளையின் பள்ளிக் கல்வி அனுபவத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் திட்டமிட மாணவர்களின் பார்வைகளை பள்ளிகள் புரிந்துகொள்ள உதவுவதில் இது விலைமதிப்பற்றது. மாணவர்களின் கற்றல் அனுபவங்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை கல்வித் துறை புரிந்துகொள்ளவும் கருத்தாய்வுப் பதில்கள் உதவுகின்றன.

### ஆபத்துகள் எவை?

பங்கேற்பதால் பல ஆபத்துகள் ஏற்படலாம் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றாலும், சில மாணவர்கள் கருத்தாய்வுக் கேள்விகளில் சிலவற்றை

தனிப்பட்டதாகவும் கவனமாக அணுகுமுறை தேவைப்படுகின்றதாகவும் காணலாம். உங்கள் பிள்ளை பங்கேற்பதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால், அவர்கள் கேள்விகளைத் தவிர்க்கும் சுதந்திரம் இன்னமும் உள்ளது அல்லது கருத்தாய்வு அவர்களுக்கு வருத்தம் அல்லது சங்கடத்தை ஏற்படுத்தினால் எந்த நிலையிலும் ஒப்புதலைத் திரும்பப் பெறலாம். கருத்தாய்வின்போது மாணவர்களுக்கு ஆதரவாக ஓர் ஆசிரியர் இருப்பார்.

ஆஸ்திரேலியாவிலும் உலகெங்கிலும் பயன்படுத்தப்படும் சரிபார்க்கப்பட்ட கருத்தாய்வுக் கருவிகளில் இருந்து கேள்விகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அவை வலிமை அடிப்படையிலானவை மற்றும் ஒவ்வொரு ஆண்டும் நிலைக் குழுவுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

## என் குழந்தை என்ன செய்யும்படி கேட்கப்படும்?

இதற்கெனத் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பான **இணையவழிக்** கருத்தாய்வுக் கருவியைப் பயன்படுத்தி **வகுப்பு நேரத்தில்** இணையவழிக் கருத்தாய்வை முடிக்க உங்கள் குழந்தை அழைக்கப்படுவார். உங்கள் குழந்தையை நாங்கள் எந்த வகையிலும் "சோதனை" செய்யவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தயவுசெய்து கவனிக்கவும்:

- கருத்தாய்வில் மாணவர் பங்கேற்பு தன்னார்வமானது மற்றும் மாணவர்கள் எந்த நேரத்திலும் விலகலாம்.
- அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில், பல்வேறு பதிப்புகளில் இந்தக் கருத்தாய்வு உள்ளது.
- கருத்தாய்வை முடிக்க சுமார் 20-45 நிமிடங்கள் ஆகும்.

## எனது குழந்தையின் இரகசியத்தன்மை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?

உங்கள் பிள்ளைக்கு அவர்களின் ஆசிரியரிடமிருந்து கருத்தாய்வை முடிப்பதற்கு தங்களுக்கே உரிய உள்நுழைவு வழங்கப்படும். மாணவர் உள்நுழைவு என்பது ஒதுக்கப்பட்ட அடையாளங்காட்டியாகும். இது பகுப்பாய்வு மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக மட்டுமே தரவை இணைக்கத் திணைக்களத்தால் பயன்படுத்தப்படும். தரவுத்தொகுப்புகளை இணைக்க, மாணவர் பெயர் அல்லது விக்டோரிய மாணவர் எண் (VSN) போன்ற அடையாளம் காணக்கூடிய தகவல்கள் **பயன்படுத்தப்படாது**. சில மாணவர்களின் மக்கள்தொகைத் தரவு (அதாவது ஆண்டு நிலை, பாலினம், வயது, பழங்குடியினர் மற்றும்/அல்லது டொரஸ் நீரிணைத் தீவினர் நிலை) திணைக்களத்தின் நிர்வாகப் பதிவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. கருத்தாய்வு நிர்வாகத்தை ஆதரிக்கும் பணியின்போது தனிப்பட்ட மாணவர் உள்நுழைவு அடையாளத்துடன் (ID) கருத்தாய்வு இணைக்கப்பட்டுள்ளது.

ORIMA Research மாணவர்களின் தனிப்பட்ட தகவலை ஆய்வு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்துகிறது. இது பள்ளி தொடர்பான மனப்பான்மைகள் குறித்த கருத்தாய்வின் நிர்வாகத்துக்கும் தரவு சேகரிப்புக்கும் உதவுகிறது. உங்கள் குழந்தையின் பதில்களின் இரகசியத்தன்மை எல்லா நேரங்களிலும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய, ORIMA Research திணைக்களத்திற்கு வழங்கும் கருத்தாய்வுப் பதில் கோப்பினில் தனிப்பட்ட முறையில் அடையாளம்

காணக்கூடிய தரவு பதிவு செய்யப்படமாட்டாது. அனைத்து தரவுகளும் ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள தகவல் தளங்களில் சேமிக்கப்படும், திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அவற்றை அணுகுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

உங்கள் குழந்தையைப் பற்றி சேகரிக்கப்படும் அனைத்துத் தகவல்களும் தனியுரிமைத் *தரவு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2014* (Vic), சுகாதாரப் *பதிவுச் சட்டம் 2001* (Vic) மற்றும் பொதுப் *பதிவுச் சட்டம் 1973* (Vic), அத்துடன் திணைக்களத்தின் பள்ளிகளின் தனியுரிமைக் கொள்கை ஆகியவற்றின்படி கையாளப்படும். மேலே உள்ள சட்டம் மற்றும் எங்கள் கொள்கைக்கு இணங்க, உங்கள் குழந்தை வழங்கிய தகவலைப் பகிர்வதற்கு சட்டப்படி நாங்கள் கோரப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளவும். உதாரணமாக, உங்கள் குழந்தையின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கும் இடத்தில்.

## முடிவுகள் எவ்வாறு தெரிவிக்கப்படும்?

ஒருங்கிணைந்த மாநில அளவிலான கருத்தாய்வுத் தரவு, முன்முயற்சிகள் பற்றிய அறிக்கைகளில் பயன்படுத்தப்படும். மேலும் மாணவர் ஈடுபாடு மற்றும் நல்வாழ்வு தொடர்பான பிரச்சனைகள் பற்றிய பொதுக் கலந்துரையாடல்களில் பயன்படுத்தப்படலாம். பள்ளி சமூகத்திற்கான ஆண்டறிக்கையின் செயல்திறன் சுருக்கத்தில் மாணவர் ஈடுபாட்டின் அளவைப் புகாரளிப்பதை உள்ளடக்கியிருப்பது, கணக்கெடுப்புத் தரவுகள் எவ்வாறு முன்னர் பயன்படுத்தப்பட்டன என்பதற்கான ஓர் உதாரணம் ஆகும்.

கருத்தாய்வுக் காலம் முழுவதும் கருத்தாய்வின் முடிவுகள் தொகுக்கப்பட்ட வடிவில் பள்ளிக்குத் தெரிவிக்கப்படும். தனிப்பட்ட மாணவர்களைப் பற்றிய தரவு அல்லது முடிவுகள் பள்ளிகளுடன் பகிரப்படாது. அறிக்கைகளில் கிடைக்கப்பெறும் அனைத்து கருத்தாய்வுத் தரவுகளும் மாணவர்களின் குழுக்களுக்கு மட்டுமே. அதனால் எந்த ஒரு தனி மாணவரையும் அடையாளம் காண முடியாது. குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் இருக்கும் இடங்களில், அந்தக் குழுவிற்கான முடிவுகளை பள்ளியால் பார்க்க முடியாதபடி தரவுகள் ஒடுக்கப்படும்.

பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுடன் கருத்தாய்வின் முடிவுகளை உங்கள் பள்ளி பகிரலாம்.

## பங்கேற்பதற்கான விருப்பத்தெரிவுகள்

இந்தக் கருத்தாய்வில் பங்கேற்பது **தன்னார்வமானது**. உங்கள் பிள்ளை கருத்தாய்வில் பங்குபெறுவதை நீங்கள் **விரும்பவில்லையெனில்,** 20/05/2024 அன்று கருத்தாய்வு தொடங்கும் முன் உங்கள் பள்ளிக்கு golden.square.ps@education.vic.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் தயவுசெய்து விலகவும்.

இந்த விலகல் செயல்முறைக்கு முன்னர் கருத்தாய்விற்கான ஆயத்தங்களை எளிதாக்குவதற்கு மாணவரின் தனிப்பட்ட விபரங்கள் ORIMA Research உடன் பகிரப்படும். உங்கள் பிள்ளை பங்கேற்பதில் இருந்து விலகினால், உங்கள் பிள்ளைக்கு கருத்தாய்விற்கான அணுகல் வழங்கப்படவில்லை என்பதை உங்கள் பள்ளி உறுதி செய்யும். கருத்தாய்வின் முடிவில் மாணவர் விபரங்கள் ORIMA Research ஆல் நீக்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, கருத்தாய்வு தொடங்கும் தேதிக்கு முன் உங்கள் பள்ளி ஒப்புதல் மறுப்பு மின்னஞ்சலைப் பெறவில்லை என்றால், 2024 ஆம் ஆண்டு பள்ளி தொடர்பாக மனப்பான்மை பற்றிய கருத்தாய்வில் உங்கள் குழந்தை பங்கேற்க நீங்கள் சம்மதிக்கிறீர்கள் என்று பொருள்**.**

உங்கள் பிள்ளையிடம் கேட்கப்படும் கேள்விகள் உட்பட இந்தக் கருத்தாய்வைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு திணைக்களத்தின் கருத்தாய்வுத் தகவல் பக்கத்தைத் தயவுசெய்து பார்வையிடவும்.

மேலும் தகவல்கள் பெற நீங்கள் விரும்பினால், உங்கள் குழந்தையின் ஆசிரியரிடம் பேசவும் அல்லது school.surveys@education.vic.gov.au என்ற மின்னஞ்சல் முகவரியில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள,

கல்வித் திணைக்களம், விக்டோரியா